सत्यमेव जयते

# இந்திய துணைத்தூதரகம்

## யாழ்ப்பாணம்

**<u>ஊடக அறிக்கை</u>**

**நுண்கலைத்துறையில் இளமாணிப்பட்டப்படிப்புக்கான இந்தியப் புலமைப்பரிசில்**

(சங்கீதம், நடனம், ஓவியம்)

நுண்கலைத்துறையில் இளமாணிப் பட்டப்படிப்புக்கான (சங்கீதம், நடனம், ஓவியம்) இந்தியப் புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பம் புதுடெல்லியிலுள்ள கலாச்சார உறவுகளுக்கான இந்தியப் பேரவையால் கோரப்படுகிறது.

விண்ணப்பதாரிகளின் வயது 20 முதல் 25 இற்கு இடையில் இருக்கவேண்டும். அத்துடன் விண்ணப்பிக்கும் பாடத்திற்கு (சங்கீதம், நடனம், ஓவியம்) க.பொ.த உயர் தரத்தில் "B" தர சித்தி உட்பட மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். அத்துடன் க.பொ.த சாதாரண தரத்திலும் உயர்தரத்திலும் ஆங்கிலப்பாடத்திற்கு சாதாரண சித்தி பெற்றிருக்க வேண்டும். விண்ணப்பப் படிவத்தை இல.14 மருதடி ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தில் பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை 9.30 மணி முதல் 1 மணிவரை வார நாட்களில் பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பப்படிவத்தை http://www.iccrindia.net/scholarshipschemes.html எனும் இணைய முகவரியிலும் விண்ணப்பதாரிகள் பெற்றுக் கொள்ள முடியும். விண்ணப்பதாரிகள் பின்வரும் மூன்று விண்ணப்பப் படிவங்களையும் இல.14 மருதடி ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். தொலைபேசி இலக்கம் 021-2220504

1. சரிபார்த்தல் பட்டியல் மற்றும் தூதரக சான்றிதழ் உட்பட புலமைப்பரிசில் விண்ணப்பப்படிவம்- 2014 (ஆறு தொகுதிகள்)
2. உடல் உறுதி உறுதிப்பாடு- சுகாதாரப் பரிசோதனை படிவம்- 2014 (ஆறு தொகுதிகள்)
3. விண்ணப்பதாரிகளுக்கான பொது அறிவுறுத்தல்கள் - 2014

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவமும் (ஆறு தொகுதி) துணையாக இறுவட்டுக்களும் ஏழு புகைப்படங்களும் மேற்குறிப்பிட்ட முகவரியில் **26.02.2014 ஆம் திகதியளவில்** பகல் 10 மணிக்கும் 1 மணிக்குமிடையில் **நேரில் கையளிக்கப்பட வேண்டும்**. விண்ணப்பதாரிகள் தமது சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை விண்ணப்பங்களைக் கையளீக்கும் போது கொண்டுவருதல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு கொழும்பிலுள்ள இந்திய கலாச்சார மைய தொலைபேசி இல-0112684698 அல்லது யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரக தொலைபேசி இல. 021-2220504 ஆகியவற்றை தொடர்புகொள்ள முடியும்.